## சென்னை கிழக்கு மாவட்டம்

# கொளத்தூர், துறைமுகம், எழும்பூர், திரு.வி.க நகர், வில்லிவாக்கம், அம்பத்தூர் ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் BLA2, BDA ஆலோசனை கூட்டங்களின் விவரம்!



### மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

| நேரம் | பகுதி | இடம் |
|---|---|---|
| **நாள்: 28.6.2025 (சனிக்கிழமை)** | | |
| மாலை 4.00 மணி | திரு.விக.நகர் தெற்கு | எம்.கே.டி.மஹால், ஓட்டேரி |
| மாலை 4.30 மணி | வில்லிவாக்கம் மேற்கு | WPA சௌந்திரபாண்டியன் பள்ளி வளாகம், அயனாவரம். |
| மாலை 7.00 மணி | வில்லிவாக்கம் கிழக்கு | WPA சௌந்திரபாண்டியன் பள்ளி வளாகம், அயனாவரம். |
| மாலை 7.00 மணி | அம்பத்தூர் வடக்கு | PSB கன்வென்ஷன் திருமண மண்டபம், அம்பத்தூர் |
| **நாள்: 29.6.2025 (ஞாயிறு)** | | |
| காலை 9.00 மணி | துறைமுகம் கிழக்கு (மற்றும்) துறைமுகம் மேற்கு | நாராயண குரு வைய்யா செட்டி சத்திரம், வரதமுத்தையா தெரு, சௌகார்பேட் |
| காலை 9.30 மணி | அம்பத்தூர் கிழக்கு | ரங்கா மகால், விவேகானந்தர் நகர், கொளத்தூர் |
| காலை 10.00 மணி | எழும்பூர் வடக்கு (மற்றும்) எழும்பூர் தெற்கு | அறிஞர் அண்ணா திருமண மண்டபம், குயப்பேட்டை. |
| காலை 11.00 மணி | அம்பத்தூர் தெற்கு | KSP மகால், காமராஜர் சாலை, பாடி |
| காலை 11.00 மணி | கொளத்தூர் கிழக்கு | அம்ரீஸ் மகால், திரு.வி.க.நகர் பேருந்து நிலையம் எதிரில் |
| மாலை 5.00 மணி | திரு.வி.க.நகர் வடக்கு | சமூக நலக்கூடம் வ.உ.சி முதல் தெரு, புளியந்தோப்பு |
| மாலை 6.00 மணி | கொளத்தூர் மேற்கு | நால்வர் திருமண மண்டபம் |

மேற்கண்ட பாகமுகவர்கள் BLA2, BDA கூட்டத்திற்கு சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், அந்தந்த தொகுதிக்குட்பட்ட இந்நாள் / முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பாகமுகவர்கள் BLA2, BDA தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட

# 1633 வனக் காவலர்கள் - வனக் காப்பாளர்களுக்குப் பணி ஆணைகள்!

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அறிவிப்பு!



சென்னை, ஜூன் 28-

வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜ கண்ணப்பன் அவர்களின் செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 05.06.2025 அன்று தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 1633 வனக்காவலர்கள் மற்றும் வனக்காப்பாளர்கள் தமிழ்நாடு வனத்துறையில் காலியிடமாக இருந்த பணியிடங்களில் ஆணை வழங்கப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். வனவிலங்குகள் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களை கண்டறிந்து வனக்காவலர்கள் மற்றும் வனக்காப்பாளர்களை கொண்ட குழு அமைக்கப்பட்டு மாவட்ட வன அலுவலர்கள் மற்றும் வனச்சரக அலுவலர்களின் மேற்பார்வையில் மனித வன உயிரின மோதலைத் தடுக்கும் வகையில் தொடர் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும், மக்கள் வசிக்கும் பகுதியில் வனவிலங்குகள் நுழைவதைத் தடுப்பதற்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எதிர்பாராத நிகழ்வுகளால் வன விலங்குகளால் தாக்கப்பட்டு எவரேனும் உயிரிழந்தால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு உடனடியாக இழப்பீட்டுத் தொகையாக ரூ.10 இலட்சம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

சமீபத்தில் வால்பாறை வனச்சரகத்திற்குட்பட்ட பச்சமலை எஸ்டேட் தொழிலாளர் குடியிருப்பு பகுதியில் சிறுத்தை ஒன்று அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 5 வயது மதிக்கத்தக்க சிறுமி செல்வி ரோஷினிகுமாரி என்பவரை தாக்கியதில் உயிரிழந்தார். உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ள நிவாரணத் தொகை ரூ.10 இலட்சம் உடனடியாக வழங்கப்பட்டு, சிறுமியின் குடும்பத்திற்கு வருத்தம் தெரிவித்து, ஆறுதல் கூறப்பட்டது.

மேலும், பொதுமக்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் வனத்துறையினரால் மனித வன உயிரின மோதல் தடுப்புக் குழுவினை கூடுதலாக நியமித்து வன உயிரினங்களின் நடமாட்டத்தைத் தொடர்ந்து கண்காணித்து, சிறுமியைத் தாக்கிய சிறுத்தையை கூண்டு வைத்து பிடித்து அடர்ந்த வனப்பகுதியில் விடப்பட்டுள்ளது. மேலும், மனித வன உயிரின மோதல் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் தொடர்ந்து கண்காணிப்பு பணியினை தீவிரப்படுத்தி, அனைத்து விதமான நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அமைச்சர் பி.கே.சேகர் பாபு முன்னிலை! பரிதி இளம் சுருதி எம்.சி. தலைமையில்!

# கழக அயலக அணி சார்பில் செம்மொழி நாள்! மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை!

## அமைச்சர் கோவி.செழியன் – நடிகர் விஜயகுமார் வழங்கினர்!

சென்னை, ஜூன்.28-

தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதல்வர் இளம் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில், கழக அயலக அணி மாநிலத் துணைச் செயலாளர் 99 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி ஏற்பாட்டில், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு "கல்விக்கு உதவுதல் கழகப்பணி! கலைஞர் போல் யார் பிறப்பார் இனி" என்ற தலைப்பில் சுமார் 250 பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் கல்வி உதவி தொகை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திரைப்படக் கலைஞர் நடிகர் விஜயகுமார் மற்றும் மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் கோ.வி.செழியன் ஆகியோர் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞரின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி தலைவர் கலைஞர் பற்றி புகழுரை ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் கல்வி உதவித் தொகையும் வழங்கி சிறப்பித்தார், மேலும் இந்நிகழ்ச்சியில் கழக அயலக அணி தலைவரும் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வீராசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். இரவிச்சந்திரன், கழக செய்தி தொடர்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா, எழும்பூர் வடக்கு பகுதி செயலாளரும் சென்னை மாநகராட்சி நியமன குழு உறுப்பினருமான சொ.வேலு, தெற்கு பகுதி கழக செயலாளர் வி.சுதாகர், எழும்பூர் தொகுதி பொறுப்பாளர் யாழினி, அவைத்தலைவர் கோ.ஏகப்பன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம். நாதன், மாவட்ட துணை செயலாளர் புனிதவதி எத்திராசன், கோ. மணி, பொதுக்குழு உறுப்பினர் க. நந்தீஸ்வரன், மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஸ்வரி ஸ்ரீதர், எல்.சுந்தர்ராஜன், வட்ட கழக

செயலாளர்கள் சு.மனோகர், நா.பாலு, வி.அபாய், ஆர். பாபு, சி.சேகர், உள்ளிட்ட மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள் மகளிர் அணியினர், கழக அயலக அணி நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.





சென்னை கிழக்கு மாவட்ட திமுக துறைமுகம் தொகுதி சார்பில், மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில், இராஜேஷ்வரி ஸ்ரீதர் எம்.சி. தலைமையில் ஜூன் 3 முத்தமிழறிஞர் கலைஞரின் 102–வது பிறந்தநாள் "செம்மொழி நாள்" விழாவை முன்னிட்டு 200 கர்ப்பிணி பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கீதா ஜீவன், திரைப்பட கலைஞர் நடிகை நளினி ஆகியோர் வழங்கி சிறப்பித்தனர். இதில் மேயர், சட்டமனற் உறுப்பினர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்(BDA), பாகநிலை முகவர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்!

### மாவட்ட செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை முகாமில் படிவத்தில் நிரப்பப்படும் விவரங்களை பிரத்தியேகமாக செயலியில் (APP) உள்ளீடு செய்யப்படவேண்டியது குறித்து கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோயில், குறிஞ்சிப்பாடி, கடலூர், சிதம்பரம், புவனகிரி ஆகிய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகங்களில் 28062025 சனிக்கிழமை, 29062025 ஞயிற்றுக்கிழமை கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு பயிற்சி கூட்டங்கள் நடைபெற உள்ளது. இக்கூட்டங்களை ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக்கழக தொகுதி பொறுப்பாளர்கள், கடலூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர்கள், தேர்தல் ஒருங்கிணைப்பு குழு ஒருங்கிணைப்பாளர்கள், ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.**
**ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை BDA மற்றும் BLA2 பயிற்சி கூட்டம்**

| தேதி | தொகுதி | இடம் | ஒன்றியம் பேரூர் |
|---|---|---|---|
| 28-06-2025<br>சனிக்கிழமை<br>காலை 9.00 மணி | காட்டுமன்னார்<br>கோயில் | மணியன் மஹால் | காட்டுமன்னார்கோயில் மேற்கு ஒன்றியம், காட்டுமன்னார் கோயில் கிழக்கு ஒன்றியம், காட்டுமன்னார்கோயில் பேரூர் |
| 29-06-2025<br>ஞாயிற்றுக் கிழமை<br>காலை 9.00 மணி | காட்டுமன்னார்<br>கோயில் | தேத்தாம்பட்டு | திருமுட்டம் மேற்கு ஒன்றியம் |
| 29-06-2025<br>ஞாயிற்றுக் கிழமை<br>மாலை 03.00 மணி | காட்டுமன்னார்<br>கோயில் | APM மஹால்<br>லால்பேட்டை | குமராட்சி தெற்கு ஒன்றியம்<br>குமராட்சி வடக்கு ஒன்றியம்<br>குமராட்சி மேற்கு ஒன்றியம்<br>லால்பேட்டை பேரூர் |
| 29-06-2025<br>ஞாயிற்றுக் கிழமை<br>மாலை 05.00 மணி | காட்டுமன்னார்<br>கோயில் | வேல் அரங்கம்<br>திருமுட்டம் | திருமுட்டம் கிழக்கு ஒன்றியம்,<br>திருமுட்டம் பேரூர் |
| 28-06-2025<br>சனிக்கிழமை<br>காலை 10.00 மணி | குறிஞ்சிப்பாடி<br>தொகுதி | மங்கியர்கரசி திருமண மண்டபம் வடலூர் | வடலூர் நகரம்,<br>குறிஞ்சிப்பாடி பேரூர் |
| 28-06-2025<br>சனிக்கிழமை<br>மாலை 03.00 மணி | குறிஞ்சிப்பாடி<br>தொகுதி | மங்கியர்கரசி திருமண மண்டபம் வடலூர் | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம்,<br>குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம் |
| 29-06-2025<br>ஞாயிற்றுக் கிழமை<br>காலை 10.00 மணி | குறிஞ்சிப்பாடி<br>தொகுதி | லோகம்மாள் திருமண மண்டபம் கண்ணார பேட்டை | கடலூர் கிழக்கு ஒன்றியம்,<br>கடலூர் மேற்கு ஒன்றியம் |
| 28-06-2025<br>சனிக்கிழமை<br>காலை 10.00 மணி | சிதம்பரம் | சீனிவாசன் மண்டபம்<br>அம்மாபேட்டை | குமராட்சி கிழக்கு ஒன்றியம்,<br>குமராட்சி மத்திய ஒன்றியம்,<br>அண்ணாமலை நகர் பேரூர் |
| 28-06-2025<br>சனிக்கிழமை<br>மாலை 03.00 மணி | சிதம்பரம் | அறுபத்து மூவர் திருமண மண்டபம் தெற்கு வீதி | சிதம்பரம் நகரம் |
| 29-06-2025<br>ஞாயிற்றுக் கிழமை<br>காலை 10.00 மணி | சிதம்பரம் | ஓம் சக்தி திருமண மண்டபம் புதுச்சத்திரம் | பரங்கிபேட்டை வடக்கு ஒன்றியம் |
| 29-06-2025<br>ஞாயிற்றுக் கிழமை<br>பகல் 2.00 மணி | சிதம்பரம் | SS மஹால் சி.முட்டலூர் | பரங்கிபேட்டை தெற்கு ஒன்றியம்,<br>பரங்கிபேட்டை மேற்கு ஒன்றியம்<br>பரங்கிபேட்டை பேரூர் |
| 29-06-2025<br>ஞாயிற்றுக் கிழமை<br>மாலை 06.00 மணி | சிதம்பரம் | கழக அலுவலகம் | கிள்ளை பேரூர் |
| 28-06-2025<br>சனிக்கிழமை<br>காலை 10.00 மணி | கடலூர் தொகுதி | செம்மண்டலம்<br>சமுதாயக் கூடம் | மஞ்சக்குப்பம் பகுதி, |
| 28-06-2025<br>சனிக்கிழமை<br>காலை 11.30 மணி | கடலூர் தொகுதி | ரோட்டரி கிளப் | புதுபாளையம் பகுதி |
| 28-06-2025<br>சனிக்கிழமை<br>மாலை 03.00 மணி | கடலூர் தொகுதி | பால கண்ணையா மண்டபம் | திருப்பாதிபுலியூர் பகுதி |
| 28-06-2025<br>சனிக்கிழமை<br>மாலை 04.30 மணி | கடலூர் தொகுதி | அழகானந்தா திருமண மண்டபம் | துறைமுகம் பகுதி |
| 29-06-2025<br>ஞாயிற்றுக் கிழமை<br>காலை 09.00 மணி | கடலூர் தொகுதி | அபிராமி திருமண மண்டபம் வரகால்பட்டு | கடலூர் தெற்கு ஒன்றியம் |
| 29-06-2025<br>ஞாயிற்றுக் கிழமை<br>காலை 11.00 மணி | கடலூர் தொகுதி | அழகியநத்தம் சமுதாய கூடம் | கடலூர் வடக்கு ஒன்றியம்,<br>கடலூர் மத்திய ஒன்றியம் |
| 28-06-2025<br>சனிக்கிழமை<br>காலை 09.00 மணி | புவனகிரி தொகுதி | ஜெகன் திருமண மண்டபம்<br>சேத்தியாதோப்பு | புவனகிரி மேற்கு ஒன்றியம்,<br>சேத்தியாதோப்பு பேரூர் |
| 28-06-2025<br>சனிக்கிழமை<br>காலை 11.00 மணி | புவனகிரி தொகுதி | NEA திருமண மண்டபம்<br>டி.நெடுஞ்சேரி | கீரப்பாளையம் கிழக்கு ஒன்றியம்,<br>கீரப்பாளையம் மேற்கு ஒன்றியம்,<br>கீரப்பாளையம் மத்திய ஒன்றியம் |
| 28-06-2025<br>சனிக்கிழமை<br>மாலை 05.00 மணி | புவனகிரி தொகுதி | VRS திருமண மண்டபம்<br>பெரியாகுறிச்சி | கம்மாபுரம் வடக்கு ஒன்றியம்,<br>கம்மாபுரம் மத்தி ஒன்றியம்,<br>கெங்கைகொண்டான் பேரூர் |
| 29-06-2025<br>ஞாயிற்றுக் கிழமை<br>மாலை 03.00 மணி | புவனகிரி தொகுதி | கண்ணன் மண்டபம்<br>புவனகிரி | புவனகிரி கிழக்கு ஒன்றியம்,<br>புவனகிரி மத்திய ஒன்றியம்,<br>புவனகிரி பேரூர் |
| 29-06-2025<br>ஞாயிற்றுக் கிழமை<br>மாலை 05.00 மணி | புவனகிரி தொகுதி | KRC திருமண மண்டபம்<br>கம்மாபுரம் | கம்மாபுரம் தெற்கு ஒன்றியம்,<br>திருமுட்டம் வடக்கு ஒன்றியம் |

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்டதி.மு.க.



மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்ட திமுக நிர்வாகிகள் கூட்டம் வட்ட செயலாளர் இ. கண்ணப்பன் ஏற்பாட்டில், ஆண்டார்குப்பம் செக் போஸ்ட் துவாரகா நகர் பகுதியில் வட்ட அவைத் தலைவர் இ. அருள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். கே. சிவசங்கரன், பி. தரணி, பா. சந்திரன், எஸ். கருணாகரன், வக்கீல் இ. வெங்கடேசன்,என். பரசுராமன், புவனேஸ்வரி மகேஷ்குமார், சி. முத்தையா, கே. ராஜ்மோகன், எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், டோமினி பிரான்சிஸ் தேவராஜ், நித்தியானந்தம், வெங்கட்ராமன், செமின் எடிசன், செமின் எடிசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.